திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிய நிர்வாகம் ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, பழைய தொழிலாளிகளுக்கு வேலை கொடுக்க மறுக்கின்ற அந்த நிர்வாகத்தின் மீது அரசாங்கமே நேரடியாக நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குச் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கமே தங்களுக்கு ரெப்ரசன்டேடிவ் கப்பாசிட்டி இல்லை என்று சொல்லி, அவர்களே வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டார்கள்.

அரிஜனங்களுக்கு வீடுகட்ட கடன் வழங்குதல்.

வினா எண் 94—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரிசனங்களுக்கு வீடு கட்ட கடன் வழங்க $1\frac{1}{2}$ சென்ட் இடம் வேண்டும் என்ற விதி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இதனை மாற்றி 1 சென்ட் இடத்திற்கே கடன் வழங்க உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இவ்விதியை சற்று தளர்த்தி அரசு 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாளில் ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி கிராமங்களில் ஏற்கனவே உள்ள பழைய வீடுகளை இடித்து அதே இடத்தில் புதிதாக வீடுகள் கட்டிக் கொள்ள அங்கீகாரம் வழங்கலாம் என்றும் ஆனால் அவ்வாறு வீடு கட்டிக் கொள்ளத் தேவையான காலி மனை 201 சதுர அடி பரப்பில் நடைமுறையிலுள்ள வடிவமைப்புடன் வீடு கட்டிக் கொள்ள ஏதுவாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வழங்குகின்றபொழுது தற்போது குறைந்த பட்சம் 10 வீடுகளாவது ஓரிடத்தில் கட்ட வேண்டுமென்ற விதி மாற்றப்பட்டு எண்ணிக்கை அதிகமாக இல்லையென்றாலும் கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

1982 பிப்ரவரி 8]

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஒரு வீடு கட்டுவதற்கு ரூ 3,000 மட்டும்தான் கடன் வழங்கப்படுகிறது கட்டுமானப் பொருள் களினுடைய விலை உயர்ந்திருக்கிற காரணத்தாலே அதை ரூ 5,000 ஆக உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அந்தத் தொகை ரூ. 4.000 மாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படுகின்ற இந்தக் கடன் தொகை ரூ 4,000 ஆக உயர்த்தப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். ரூ. 4 000 கூடப் போதுமானது அல்ல. அதை ரூ. 5 000 ஆக உயர்ததித் தரவேண்டும். அதற்கு அமைச்சர் ஆணை பிறப்பிப்பாரா என் பதை அறிய விரும்புவதோடு தற்போது தரப்படுகின்ற கடனை வைத்துக் கொண்டு மட்டும் அவர்கள் வீடு கட்டிக் கொள்வ தில்லை. நிறைய கடன் பட்டு வீடு கட்டிக் கொள்கிறார்கள் என்பதையும் அமைச்சர் அறிவாரா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 5 000 அல்ல ரூ. 8,000 வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. முன்பு ரூ. 3,000 என்று இருந்ததை ரூ. 3,750 என்று உயர்த்தி, இப்பொழுது ரூ. 4,000 ஆக உயர்த்தி இருக்கிறோம். அதிலே, ஆதி திராவிட மக்களுக்கு ரூ. 1,000 மானியம் உண்டு. ஆதி திராவிட மக்க ளுக்குக் கொடுக்கக்கூடிய தொகைக்கு வட்டி கிடையாது எனவே இந்தச் சலுகைகள் எல்லாம் இருக்கிற காரணத்தால் நிதி ஆதா ரத்தை மனதில் கொண்டு காலப் போக்கில் உயர்த்துவதைப் பற்றி இந்த அரசு அனுதாபத்தோடு பரிசீலனை செய்யும்

(முற்பகல் 10–10.)

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற போது 4 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதுகூட 3 தவணைகளில் தரப்படுகிறது. ஆனால் அவர்கள் கல் வாங்கிப் போட்டுவிட்டு, பிறகு 2, 3 மாதங்கள் கழித்து சிமென்ட் மற்றும் பல பொருள்கள் வாங்கும் நிலையில் இருக்கிறார்கள். அவர் களுக்குப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பணத்தை ஒரே தவணையில் கொடுப்பதற்கு அரசாங்கம் நட

வடிக்கை எடுக்குமா ? அதோடு இந்த 4,000 ரூபாய் உயர்த்தப் பட்ட பணம் இன்னும் பொதுமக்களுக்குக் கிடைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, ஒரே முறையில் 4 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் ஒரே நேரத்தில் செலவாகிவிடும் ஸ்டேஜ் டைப ஸ்டேஜ் கொடுத்தால்தான அவர்களுக்கும் பாதுகாப்பு, நமக்கும் பாதுகாப்பு, உங்களுக்கும் பாதுகாப்பு. எனவே இந்த முறையில் தந்து கொண்டிருக்கிறோம்

திருமதி தா. இராசாம்பாள் : தலைவர் அவர்களே மறைந்த அமைச்சர் கக்கன் அவர்கள் காலத்தில் என்னுடைய தொகுதியில் ஒரு கிராமத்தில் மண் ஒட்டர்கள் என்பவர்க்கு காலனி கட்டிக் கொடுத்தார்கள் அது மிகவும் பாழாகி சீர் கேடடைந்திருக்கின்றது. அது மட்டுமல்ல, அவர்களால் அதைப் பழுது செய்ய இயலாது, அதை மீண்டும் புதுப்பித்துக் கொடுக்க அரசு முன் வருமா ? மேலும் 2,400 ரூபாய் கடன் கொடுக்கப் பட்டு அந்த நபர்களுக்கு இன்னும் வீடுகள் கட்டிக் முடிக்காமல் உள்ளது அவர்களுக்கும் இந்த 4 ஆயிரம் ரூபாய்கள் கொடுக்கப் படுமா ? அதோடு ஏற்கெனவே ரூபாய் 3,000 கொடுக்கப்பட்டவர்களுக்கும் இந்த ரூபாய் 4,000 கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் '' ஹாட்கோ '' மூலம் வீடு கட்டித் தருவதைப் பற்றி சொல்லுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். இந்தத் திட்டம் புரட்சித் தலைவர் அரசு வந்த பிறகு, கிராமத்திலே உள்ள ஏழை மக்களுக்கு, மாதத்திற்கு 350 ரூபாய்க்குக் குறைவாக வருவாய் உள்ள ஏழை மக்களுக்கு ஒரு இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதுதான் இந்தத் திட்டம். அதை அவர்கள் '' என்கரேஜ் '' செய்து அதற்கு ஆதரவு இருக்கின்ற காரணத்தினால் 5 ஆண்டுகளில் 2 இலட்சம் வீடுகள் கட்டித் தருவது என்று முடிவெடுத்திருக்கிறோம். இது எல்லா வகுப்பினர்களுக்கும் உண்டு. ஆதி திராவிட மக்களுக்கும் உண்டு, ஆதி திராவிடா அல்லாத மக்களுக்கும் உண்டு. நடைமுறையில் பார்க்கப்போனால், 80, 82 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டதில் 75 சதவிகிதம் ஆதி திராவிட மக்கள் பலன் பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற வீட்டுவசதித் திட்டம் வேறு, இது வேறு.

திரு. ஜி. மூர்த்தி : தலைவர் அவர்களே, நகரத்தில் உள்ள அரிசன மக்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்கு 25 ஆயிரம், 30 ஆயிரம் ரூபாய் என்று கடன் தருகிறார்கள். ஆனால், குறைந்த

1982 பிப்ரவரி 8]

பட்சம் டவுன் பஞ்சாயத்தில் உள்ள மக்கள் வாங்குகிற கடன் 4 ஆயிரம், 5 ஆயிரம் என்று இருக்கின்றது. இந்த 26 ஆயிரம், 30 ஆயிரம் ரூபாய்கள் குறைந்த பட்சம் டவுன் பஞ்சாயத்துக்களுக்காவது விஸ்தரிக்கப்படுமா - அதே நேரத்தில் வடார்க்காடு மாவட்டத்தில் தற்போது வீடு கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட கடன் தொகை "அலாட்மென்ட்" போதவில்லை என்ற காரணத்தினால் நிறுத்திவைக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், இது குறித்து விரிவான பதிலை நான் தருகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது மொத்தமாக பணத்தைக் கொடுத்தால் செலவழித்துவிடுவார்கள் என்று சொன்னார்கள். ஆனால், பர்ஸ்ட் இன்ஸ்டால்மென்ட், செக்கண்டு இன்ஸ்ட்டால்மென்ட், தேர்டு இன்ஸ்ட்டால்மென்ட் என்று 4 ஆண்டுகளில் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், அவர்கள் வீட்டைப் பிரித்துப் போட்டுவிட்டு, பேஸ்மென்ட் அளவில் இன்றைக்கு கட்டிவிட்டு, அவஸ்தைப்படுவது அமைச்சருக்குத் தெரியுமா - அப்படி தெரிந்திருந்தால் அந்த பேஸ்மென்ட் வரை கட்டி இருப்பவர்களுக்காவது விரைவில் பணம் கொடுத்த அவர்கள் வீட்டைக் கட்டிக் கொள்வதற்கு அரசு உதவி செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறவர்களின் பட்டியலை அரசுக்குக் கொடுத்தால் அதைப் பற்றி ஆவன செய்ய அரசு முயற்ச்சிக்கும்.

ஆவுடையாபுரம் நக்சகலக்கோட்டை கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

***வினா எண் 95—திரு. மு. சுந்தரராஜன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆவுடையாபுரம் , நக்கலக்கோட்டை ஆகிய கிராமங்களில் தற்சமயம் வழங்கப்படும் குடிதண்ணீரைப் பருகினால் நீர்கட்டு, யானைக்கால் போன்ற வியாதிகள் ஏற்படுவதாக புகார் செய்யப்பட்டு வாரிய அதிகாரிகள் சோதனைக்காக எடுத்துச் சென்றுள்ளது இந்த அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அப்படியானால் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?